பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

01 09 2026 TUESDAY 6.30 PM

மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1) தனிநபர் வளர்ச்சியிலும், சமூக மேம்பாட்டிலும் கல்வி முக்கிய பங்காற்றுவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2) தொழில் முதலீடுகளில் சீர்திருத்தங்கள் மற்றும் எளிய நடைமுறைகள் மூலம் தொழில்துறையினரின் சிரமங்கள் குறைந்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

3) தமிழகத்திற்கு தேவையான 840 மெட்ரிக் டன் வெங்காயம் இரண்டாவது தொகுப்பில் அனுப்பப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4) விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட தனிகுழுக்கள் திறம்பட செயல்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு வெங்கடரமணன் கூறியுள்ளார்.

5) தமிழகத்தில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் சென்னை, செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி உள்ளிட்ட 16 மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

தனிநபர் வளர்ச்சியிலும், சமூக மேம்பாட்டிலும் கல்வி முக்கிய பங்காற்றுவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்

குடியரசுத் தலைவர் மாளிகையில் இன்று தம்மை சந்தித்த ஒடிஷா மாநிலத்தை சேர்ந்த கலைஞர்களிடம் உரையாடிய குடியரசுத் தலைவர், இளம் சமுதாயத்தினரை கல்வி கற்க ஊக்குவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

கல்வியோடு திறமைகளையும் வளர்த்துக்கொள்ள தேவையான வாய்ப்புகளை அவர்களுக்கு செய்து தர ணேடும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நவீன வளர்ச்சிக்கு ஏற்ப இளைஞர்களை ஆரம்பத்திலிருந்தே தயார்படுத்த வேண்டும் என்றும், நாட்டின் வளமான கலாச்சார பாரம்பரியத்தையும், தொன்மை சிறப்பையும் இளைஞர்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டியது அவசியம் என்றும் குடியரசுத் தலைவர் கூறினார்.

<<<<<<>>>>>

தொழில் முதலீடுகளில் சீர்திருத்தங்கள் மற்றும் எளிய நடைமுறைகள் மூலம் தொழில்துறையினரின் சிரமங்கள்

குறைந்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

அமெரிக்காவில் ஜி-20 நிதியமைச்சர்கள் கூட்டத்திற்கு இடையே செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளித்த அவர், மத்திய — மாநில அரசுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு, பொருளாதார வளர்ச்சிக்கு உதவிடும் என்று தெரிவித்தார்.

உலகளாவிய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதில் மாநில அரசுகள், மத்திய அரசுக்கு உறுதுணையாக உள்ளன என்றும் அவர் கூறினார்.

தொழில் தொடங்குவதை எளிதாக்குவதில் மாநில அரசுகள், மத்திய அரசுக்கு அளித்துவரும் ஒத்துழைப்புக்கும் அவர் பாராட்டு தெரிவித்தார்.

இதுவரை, ஆயிரத்திற்கும் மேற்பட்ட பழமையான சட்டங்கள் அகற்றப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தொழில் நிறுவனங்கள் மற்றும் வர்த்தக அமைப்புகளுடன் அரசு அவ்வப்போது ஆலோசனை நடத்தி, உரிய சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருவதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

உள்நாட்டு தேவைக்கான வெங்காயம் போதிய அளவில் இருப்பில் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நாட்டில் உள்ள 19 நகரங்களுக்கு தேவைக்கு ஏற்ப வெங்காயம் அனுப்பப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரயில்கள் மற்றும் லாரிகள் மூலம் தொடர்ந்து அனுப்புவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னைக்கு இரண்டாவது தொகுப்பில் அனுப்பப்பட்ட 840 மெட்ரிக்டன் வெங்காயம் சென்னையை அடைந்துள்ளதாகவும், தமிழகத்தின் மற்ற நகரங்களுக்கு இதனை அனுப்புவதற்கான நடவடிக்கைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாலை மார்க்கமாக நாடு முழுவதும் ஆயிரம் மெட்ரிக்டன் வெங்காயம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், இதனால் முக்கிய நகரங்களில் வெங்காயம் விலை கட்டுக்குள் இருப்பதாகவம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசின் கொள்முதலுக்காக வெங்காயம் வழங்கிய **3** ஆயிரத்து **400** விவசாயிகளுக்கு **210** கோடி ரூபாய் நேரடியாக வங்கிக் கணக்குகள் மூலம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் நலனை பாதுகாக்கவும், நுகர்வோருக்கு நியாயமான விலையில் வெங்காயம் கிடைக்கவும் அரசு அனைத்து நடவடிக்கைகளும் எடுத்து வருவதாக நுகர்வோர் விவகாரங்கள் துறை செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள தனிகுழுக்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளை திறம்பட மேற்கொண்டு வருவதாக மாநில உணவுத்துறை அமைச்சர் திரு வெங்கடரமணன் தெரிவித்துள்ளார்.

விலைவாசி அதிகரித்துள்ள அத்தியாவசியப் பொருட்களை கண்டறிந்து, அவற்றை கூட்டுறவு அங்காடிகள் மூலம் விற்பனை செய்வதற்கான நடவடிக்கையை உயர்நிலைக்குழுக்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூடி இதுகுறித்து இக்குழு முடிவெடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

தேசிய வேளாண் கூட்டுறவு அமைப்பின் மூலம், கொள்முதல் செய்யப்பட்டுள்ள ஆயிரம் மெட்ரிக் டன் வெங்காயம், கூட்டுறவு

அங்காடிகள் மற்றும் நியாயவிலைக்கடைகள் மூலம் கிலோ 35 ரூபாய் விலையில் விநியோகிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

நாளை மறுநாள் முதல் நியாயவிலைக் கடைகளில் ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு கிலோ வெங்காயம் விநியோகிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

வேளாண்மையில் பின்தங்கியுள்ள மாவட்டங்களை ஊக்குவிப்பதற்கான பிரதமரின் தனதான்ய திட்டத்தின் செயல்பாடுகளை மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் இன்று புதுதில்லியில் ஆய்வு செய்தார்.

நாடு முழுவதிலும் தெரிவு செய்யப்பட்ட 100 மாவட்டங்களின் வேளாண் திட்டங்களை செயல்படுத்துவது, மாவட்ட அளவில் விவசாயிகளுக்கான உதவித் திட்டங்களை செயல்படுத்தி, சாகுபடியை ஊக்குவிப்பது உள்ளிட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை அவர் ஆய்வு செய்தார்.

<<<<<<>>>>>

மேட்டூர் அணையிலிருந்து சம்பா சாகுபடிக்காக இன்று தண்ணீர் திறக்கப்பட்டதை தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகள் வரவேற்றுள்ளனர்.

தொடர்ந்து, 120 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிட மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை வைத்தனர்.

*(Sound Byte — விவசாயிகள் - 60 Sec. )*

<<<<<<>>>>>

தமிழகத்தில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் சென்னை, செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி உள்ளிட்ட 16 மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

*(Sound Byte — வி ஆர் துரை - 50 Sec. )*

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

மாநிலம் முழுவதும் 52 முக்கிய கோவில்களில் பக்தர்கள் செல்போன் எடுத்துச் செல்ல இன்றுமுதல் தடை விதிக்கப்பட்டுள்ளதையடுத்து, ஸ்ரீரங்கம் கோவிலில் செல்போனை பாதுகாக்க லாக்கர்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

-----------------

காஞ்சிபுரத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சியர் திருமதி சினேகா முன்னிலையில் இன்று நடைபெற்றது.

--------------------

நாமக்கல் கவிஞர் வெ. ராமலிங்கம் மகளிர் அரசு கலைக் கல்லூரியில் இந்த கல்வியாண்டிற்கான கல்லூரி பேரவை தொடக்க விழா மாவட்ட ஆட்சியர் திரு மதுபாலன் தலைமையில் இன்று நடைபெற்றது.

---------------

தூத்துக்குடியில் மத்திய அரசின் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடத்தப்படும் பயிற்சிகளை பெண்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் திரு விஷ்ணு மகாஜன் கேட்டுக்கொண்டுள்ளார்.

--------------

நெல்லை மாவட்ட ஆட்சியர் பதவி உருவாக்கப்பட்டு இன்றுடன் 236 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.

<<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

இந்தோனேஷியா டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Dig vijaya Pratap Singh** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **6-4, 6-2** என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **Azuma Visaya**-வை வென்றார்.

**<<<<<<END>>>>>>**